






## திராவிட மாடல் அரசு

84

**நீரை மகேந்திரன்**

**‘முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சியை முன்னோக்கிக் கொண்டு செல்லும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார், நமது முதலமைச்சர். உள்ளடக்கிய வளர்ச்சியைக் கொண்ட அந்தத் திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி....**

# எறையூர் காலணிப் பூங்கா!

## சத்தமில்லாமல் சாதிக்கும் பெரம்பலூர்

- செருப்புகள், ஷூ உற்பத்தி அதற்குத் தேவையான உதிரிப் பொருள்கள் தயாரிப்பு.
- 3 ஆண்டுகளில் முழுசெயல்பாட்டில் காலணிப் பூங்கா.
- 50 ஆயிரம் பேருக்கு வேலை வாய்ப்பு.
- வேலைவாய்ப்பில் பெண்களுக்கு முன்னுரிமை.



‘எல்லோருக்கும் எல்லாம்’ என்கிற சமூகநீதிக் கொள்கையை, தொழில்துறையிலும் செயல்படுத்திக் கொண்டிருக்கிறது தமிழ்நாடு அரசு. தமிழ்நாட்டின் தொழில் முன்னேற்றத்துக்கு முதலீடுகளைத் திரட்டி வரும், ‘திராவிட மாடல் நாயகர்’ நமது முதலமைச்சர் அவர்கள். சென்னை, ஓசூர் எனத் தொழில் துறை நகரங்களுக்கு மட்டும் முதலீடுகளை திரட்டி வரவில்லை.

கோவை, தூத்துக்குடி போன்ற நகரங்களுக்கும் முதலீடுகளைக் குவித்து வருவதைக் காண்கிறோம். இன்னுமொரு படி மேலே, ராணிப்பேட்டை, பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களும் சத்தமில்லாமல் முதலீட்டுச் சாதனைகளை நிகழ்த்தி வருகின்றன. தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி இல்லாத மாவட்டங்களே இல்லை எனும் வகையில், புதிய அணுகுமுறைகளை தமிழ்நாடு அரசு கையாண்டு வருவதன் விளைவுதான் பெரம்பலூர் மாவட்டம், எறையூர் தொழில் பூங்கா. அங்கு அமைந்துள்ள காலணி உற்பத்திப் பூங்கா.

2022-23 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், “கோயம்புத்தூர், பெரம்பலூர், மதுரை, வேலூர், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் தொழில் துறை வளர்ச்சியை ஊக்குவிக்கப் புதிய தொழில் பூங்காக்கள் அமைக்கப்படும்” என்ற அறிவிப்பினை, வெளியிட்டார் நமது முதலமைச்சர்.

அந்த அறிவிப்பினை அடுத்து, மிகக் குறுகிய காலத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கும் வகையில், அங்குள்ள எறையூர் சிப்காட்டில் 243.49 ஏக்கர் பரப்பளவில் தொழில் பூங்கா அமைக்கும் பணிகள் நடைபெற்று, 2022 நவம்பர் மாதம் 28-ஆம் தேதியே, அந்தத் தொழில் பூங்காவைத் திறந்தும் வைத்தார்.

அந்தப் பூங்காவைத் திறந்து வைப்பதற்கு முன்னர், தமிழ்நாட்டின் காலணித் துறை சார்ந்த காலணிக் கொள்கையையும் தமிழ்நாடு அரசு வெளியிட்டது. 23.11.2022 அன்று **“தமிழ்நாடு காலணி மற்றும் தோல் பொருட்கள் கொள்கை -2022”** அறிவிப்பை முதலமைச்சர் வெளியிட்டார்.

குறிப்பாக, தோல்பொருட்கள் துறையில், தமிழ்நாடு நீண்ட பாரம்பரிய பெருமைகளைக் கொண்டுள்ளது. அதேநேரத்தில், தோல் பயன்படுத்தப்படாத காலணிகளின் நுகர்வும், விளையாட்டுக் காலணிகளுக்கான தேவையும் அதிகரித்துள்ளன. அந்தத் துறையில் அதிக வளர்ச்சி உள்ளது என்பதுடன், ஏற்றுமதிக்கான வாய்ப்புகளும் உள்ளன என்பதால், மிகப்பெரிய வேலைவாய்ப்பை உருவாக்கும் துறையாகவும் இந்தத் துறை உள்ளது.

இந்தத் துறையின் முக்கியத்துவத்தை உணர்ந்துதான், திராவிட மாடல் அரசு ‘காலணிக் கொள்கையை’ வெளியிட்டது. வெளியிட்டதுடன் மட்டுமில்லாமல், காலணி உற்பத்தி நிறுவனங்களை அடையாளம் கண்டு, மாநிலத்தில் பல இடங்களில் காலணி உற்பத்தி ஆலைகளை அமைக்க, முதலீடுகளைத் திரட்டும் பணிகளையும் செய்தது.

முதற்கட்டமாக, ராணிப்பேட்டை மாவட்டம், பனப்பாக்கத்தில் ஒரு காலணிப் பூங்கா கொண்டுவரப்பட்டது. பெரம்பலூர் மாவட்டம், எறையூர் சிப்காட்டில் இரண்டாவது காலணிப் பூங்கா அமைக்கவும் திட்டமிடப்பட்டது.

### ஒப்பந்தமும் அடிக்கல் பணிகளும்

அதற்காக, கோத்தாரி இண்டஸ்ட்ரியல் கார்ப்பரேஷன் மற்றும், தைவானின் எவர்வன் குழுமத்தின் கூட்டுமுயற்சியில் உருவான ஃபீனிக்ஸ் கோத்தாரி நிறுவனத்துடன் ஒப்பந்தம் செய்தது தமிழ்நாடு அரசு. ரூ.1,700 கோடி மதிப்பீட்டில் இரண்டு புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் முதலமைச்சர் முன்னிலையில் கையெழுத்தாகின. அந்த ஒப்பந்தங்கள் மூலம் எறையூரில் காலணிப் பூங்கா அமைக்க வழி ஏற்பட்டது.

எறையூர் தொழில் பூங்காவைத் திறந்து வைத்த அன்றே, ஃபீனிக்ஸ் கோத்தாரி ஒப்பந்தம், அதைத் தொடர்ந்து காலணிப் பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார் முதலமைச்சர்.

**பின்தங்கிய மாவட்டமான பெரம்பலூர் மாவட்டத்தின், பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடைவதுடன் மாவட்டத்தின் வளர்ச்சி மேலும் உயரும் என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.**

சிப்காட் நிறுவனம் மற்றும் ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்கா மற்றும் தைவான் நாட்டைச் சேர்ந்த மேலும் 10 தொகுப்பு நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டுள்ள இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மூலம், முதற்கட்டமாக 25,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகியுள்ளது.

இந்த 12 புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மூலம் ரூ.2,440 கோடி முதலீடு திரட்டப்பட்டுள்ளதுடன், எதிர்காலத்தில் பெரம்பலூர் மாவட்டத்தில் அமையவிருக்கும் தோல் அல்லாத காலணி மற்றும் அதன் தொகுப்பு தொழில் நிறுவனங்களின் மூலம் ரூ.5,000 கோடி முதலீடு ஈர்க்கப்படும் என்றும், 50,000 நபர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### விறுவிறு கட்டுமானப் பணிகள்

இந்தப் பணிகளுக்குப் பின்னர், ஃபீனிக்ஸ் கோத்தாரி நிறுவனம் மற்றும் தைவான் நிறுவனத்தின் கூட்டுமுயற்சியில், ஜே.ஆர். ஒன் ஃபுட்வேர் நிறுவனத்தின் ஆலைப் பணிகள் தொடங்கப்பட்டன.

ஆலையின் கட்டுமானப் பணிகளை, அவ்வப்போது ஆய்வுசெய்து பல அமைச்சர்களும் விரைவுபடுத்தினர். குறிப்பாக, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா உள்ளிட்டவர்கள் தொடர்ச்சியாக கண்காணித்துத் துரிதப்படுத்தினர். அதையடுத்து, அடிக்கல் நாட்டப்பட்ட ஓர் ஆண்டில், ஆலை கட்டி முடிக்கப்பட்டு உற்பத்தியும் தொடங்கி வைக்கப்பட்டது. அதையும் நமது முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்.

அப்போது பேசிய முதல்வர் அவர்கள், “2028-ஆம் ஆண்டுக்குள் 2,440 கோடி ரூபாய் முதலீடு செய்து 29,400 பேருக்கு வேலைவாய்ப்பு அளிக்கும் வகையில், ‘பீனிக்ஸ் கோத்தாரி நிறுவன ஒப்பந்தம்’ வழிவகை செய்துள்ளது எனக் குறிப்பிட்டார்.

### முதலீடுகள் தொடரும்

தோல் பொருட்கள் அல்லாத, இந்தக் காலணிகளுக்கான மூலப்பொருள், பெரம்பலூரிலேயே உற்பத்திச் செய்யப்பட்டு, காலணிகள் (SHOE) தயாரிக்கப்படவுள்ளன. இந்த வசதி இந்தியாவிலேயே முதன்முறையாக எறையூர் காலணித் தொழிற்பூங்காவில் மட்டுமே உள்ளது.

ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவில், லேஸ்கள், பசைகள், கொக்கிகள் மற்றும் ஐலெட்டுகள் போன்ற பொருட்களைத் தயாரிக்கும் உற்பத்தியாளர்களும் தொழில் அமைக்கும் வசதிகளைக் கொண்டுள்ளது.

இந்தக் காலணிப் பூங்கா, மூன்று வருடங்களுக்குள் முழுமையான செயல்பாடுகளை எட்டும் என்றும், அதன்மூலம் இந்தியாவே பெரம்பலூர் மாவட்டத்தைத் திரும்பிப் பார்க்கும் என்றும் ஃபீனிக்ஸ் கோத்தாரி நிறுவனம் தெரிவிக்கிறது. குறிப்பாக, கொரியா, தைவான், வியட்நாம் உள்ளிட்ட நாடுகளில் இருந்து தொழில் நிறுவனங்கள், பெரம்பலூர் மாவட்டத்தை நோக்கி வருகை தர உள்ளன.

இந்தத் தொழில் நிறுவனங்களில் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை அளிக்கப்படுவதன் மூலமாக பின்தங்கிய மாவட்டமான பெரம்பலூர் மாவட்டத்தின், பொருளாதார வளர்ச்சி மேம்பாடு அடைவதுடன் மாவட்டத்தின் வளர்ச்சி மேலும் உயரும் என எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

**“தாழக்கிடப்பாரை தற்காப்பதே தர்மம்” என்பது அய்யா வைகுந்தரின் அருள்மொழி. பகுத்தறிவு வழி செயல்படும் நம் திராவிட மாடல் அரசு,** அதைச் செயலூக்கமாகக் கொண்டு பின்தங்கிய மாவட்டங்களின் வளர்ச்சியில் கவனம் குவித்துள்ளது அந்த அருள்மொழிக்குச் சான்று.

**...சாதனை தொடரும்**

### எட்டுத் திக்கும் சேர உள்ள தமிழ்ச் செல்வம்!

உலக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட தமிழின் மிகச் சிறந்த நூல்களை, 100 பல்கலைக்கழகங்கள் மற்றும் நூலகங்களில் இடம்பெறச் செய்வதற்கான முயற்சிகளை, தமிழ்நாடு அரசு மேற்கொண்டுள்ளது.

குறிப்பாக, தமிழ் மொழி, தமிழிலக்கியம், தமிழ்ப் பண்பாடு, தமிழர் நாகரிகம் போன்றவற்றைப் பேசும் நூல்கள், ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், சீனம் போன்ற மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டவற்றைத் தேர்ந்தெடுத்து, உலக அளவிலான 100 பல்கலைக்கழகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட உள்ளன.

இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு, தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் முனைவர் ம.இராசேந்திரன் தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளதுடன், குழுவில் இலக்கியம், மொழிபெயர்ப்பு, பதிப்புத்துறை சார்ந்த ஆளுமைகளும் இடம் பெற்றுள்ளனர்.

சங்க இலக்கியம் தொடங்கி, நவீன இலக்கியம் வரை புதினங்கள், சிறுகதைகள், கவிதைகள், திறனாய்வுகள் உள்ளிட்ட நூல்கள் உலக மொழிகளிலும், இந்திய மொழிகளிலும் பல்வேறு காலக்கட்டங்களில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அது தொடர்பான விவரங்கள் சேகரிக்கப்பட உள்ளன.

தமிழறிஞர்கள், திறனாய்வாளர்கள், மொழிபெயர்ப்பாளர்கள், தமிழ் ஆர்வலர்கள் இத்திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கான ஆலோசனைகளைத் தமிழ் வளர்ச்சித்துறை அலுவலகத்தில் வழங்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எட்டுத் திக்கும் சென்று அறிவுச் செல்வங்களைத் திரட்டிய தமிழ், இன்று எட்டுத் திக்கும் சென்று தமிழ், தமிழரின் பெருமையைக் கொண்டு சேர்க்க உள்ளது.

### ஃப்ளாஷ்பேக்



**பேச்சுப்போட்டியில் தலைவரின் வாழ்த்து!**



**பொள்ளாச்சி சித்திக்**

2011-ஆம் ஆண்டு தி.மு.க இளைஞர் அணி நடத்திய பேறறிஞர் அண்ணா நூற்றாண்டுப் பேச்சுப்போட்டியில் கோவை மாவட்டத்தில் முதல் பரிசும் மாநில அளவிலான பரிசும் பெற்றேன். அந்த நிகழ்வை அன்று நடத்தியவர் இன்றைய கழகத் தலைவர் அவர்கள். மாநில அளவிலான இறுதிப்போட்டி, செங்கல்பட்டில் நடைபெற்றதையொட்டி பேசிவிட்டு, மேடையில் இருந்து கீழே இறங்கியவுடன் கழகத் தலைவர் என்னை அழைத்துப் பாராட்டினர். அப்படியான தருணத்தில் எடுக்கப்பட்ட புகைப்படம் இது.

அந்தப் பேச்சுப்போட்டி முடிந்த சில நாட்களில் அன்றைய இளைஞர் அணி துணைச் செயலாளர் மா.சுப்பிரமணியம் அவர்களிடம் இருந்து அழைப்பு வந்தது, சென்னையில் தளபதியாரின் 60-வது பிறந்தநாள் நிகழ்வில் பேசும் வாய்ப்பு கிடைத்தது. இன்றைக்கு நான் வந்தடைந்திருக்கும் இடத்திற்கு இந்நிகழ்வு முக்கிய காரணம் என்பேன்.

**- பொள்ளாச்சி சித்திக்,**
**கழகச் செய்தித் தொடர்புத் துணைச் செயலாளர்,**
**சென்னை.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473
மின்னஞ்சல்: youthwing@dmk.in

### கருவூலம்


**முதல் வெற்றி!**

1950-ஆண்டு மே மாதம், ஆரம்பப் பள்ளிகளில், இந்தி கட்டாயப் பாடமென அப்போதைய ஒன்றிய அரசு அறிவித்தது. உடனே, கழகம் தீவிரப் போராட்டங்களில் இறங்கியது. பேரறிஞர் அண்ணா, பேரணி திரட்டினார். சிறைச்சாலைகள், தடியடிகள் என தீவிர எதிர்ப்பு தாளாமல் இரண்டே மாதத்தில் ‘இந்தி கட்டாயமில்லை, விருப்பப் பாடமே’ என அறிவித்தனர். தி.மு.கழகம் தொடங்கிய சில மாதங்களில் பெற்ற முதல் வெற்றி இது.

## திராவிடத்தால் வாழ்கிறோம்

588

எழுத்து:
கோவி.லெனின்
ஓவியம்:
கி.சொக்கலிங் கம்




-வாழ்வோம்

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by R.N.Murugan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.